உ

சிவமயம்.

# கீரிமலைமகத்துவம்.

வண்ணைநகர்

நா. வை. தியாகராஜா

எழுதியது.

யாழ்ப்பாணம்

க. வைத்தியலிங்கபிள்ளையால்

தமது

நாவலர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1924.

விலை சதம்-10.

உ

சிவமயம்.

# கீரிமலைமகத்துவம்.

வண்ணைநகர்

நா. வை. தியாகராஜா

எழுதியது.

யாழ்ப்பாணம்

க. வைத்தியலிங்கபிள்ளையால்

தமது

நாவலர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1924.



# முன்னுரை.

கீரிமலை இலங்கையிலுள்ள ஓர் விசேட தலம். இது மூர்த்தி தலம் தீர்த்தமாகிய மூவிசேடங்களுக்கும் பேர் போனது. இதன் வரலாறுகள் தக்ஷிணகைலாசபுராணம் திரிகோணசலபுராணம் கைலாசமாலை, வையாபாடல் முதலிய பழைய நூல்களிலும் நகுலேஸ்வர மான்மியம், ஈழமண்டலசதகம் முதலிய தற்காலநூல்களிலும் காணப் படுகின்றன. இலங்கை யாழ்ப்பாணச் சரித்திரங்களிலும் இதைப்பற்றிய சில குறிப்புகள் உண்டு. இக்கீரிமலையைப் பற்றிய வரலாறுகளை ஓர் சிறுபுத்தகமாக எழுதி வெளி யிடின் அது யாவருக்கும் உபயோகமாகுமென்று கருதி யே இச்சிறு புத்தகத்தை யெழுதிவெளியிட்டேன்.

மானிப்பாய்
12-7-24.

நா. வை. தியாகராசா.

இச்செய்யுள் சுன்னுகம்

ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவர்

இயற்றியது.

---

விருத்தம்.

கீரிமாமலை வாரிதி யாடியே
    கிரீசனும் நகுலேசனை நாடியே
சேருமன்பொடு சிந்தனை கூடியே
    திசைகொளுக்கிர சோழராசன்மகள்
மாருதப்பிரவல்லியென் பேரினள்
    வஃவுவெம்பரி மாமுகமோடுநோய்
தீரநீங்கின ளித்தலத்தேயெனில்
    செப்பிலங்கையிலொப்பிதற்கில்லையே.

உ

சிவமயம்.

# கீரிமலை மகத்துவம்.

மானிப்பாய்

மருதடி விநாயகர் துதி.

வெண்பா.

நல்லார் துதிக்கு நகுலகிரி மான்மியத்தை
வல்லார்மகிழ வகுப்பதற்கு—வில்லார்
மருதடிவாழ் வேழமுக மாமணி யென்றன்பர்
கருதடியே சந்ததமுங் காப்பு

மூர்த்திதலம் தீர்த்தம் முறையா லணுகினர்க்கு
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

ஆன்மாக்கள், முத்தியாகிய சாத்தியத்தை அடையும் பொருட்டு, அவர்களின் சித்த பரிபாகத்துக் கேற்ப, மேலோரால் வகுக்கப்பட்ட சாதனங்கள் பலவுண்டு. அவற்றுள் மூர்த்தி தெரிசனம், தலவாசம், தீர்த்த ஸ்நானம் என்பனவும் அடங்கும். இந்த மூவகைச் சாதனங் களுக்கும் வேண்டிய மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய விசே டணங்கள் மூன்றும் ஒருங்கே பொருந்திய தலங்கள் பரத நாட்டிற் பலவுண்டு. ஆனால், இலங்கையிலுள்ள தலங் களுள் இச்சிறப்புக்கள் மூன்றும் பெற்று விளங்குபவை களுள் முதன்மை பெற்றது கீரிமலையாம். இது யாழ்ப் பாணத்தின் வடகோடியிலே சமுத்திரதீரத்திலே திகழ் கின்றது. யாழ்ப்பாணத்துக்கும் இதற்கும் பன்னிரண்டு மைல் தூரம். கோடியக்கரைக்கும் இதற்கும் ஏறக்

குறைய முப்பத்தைந்து மைல் தூரம். இக்கீரிமலை நகுலேஸ்வரம், திருத்தம்பலேஸ்வரம், என்றும் அழைக்கப்படும். இதற்குச் சமீபத்துள்ள ஓர்சிறு கிராமம் திருத்தம்பாலை என வழங்குகின்றது இக் கீரிமலையிலே மெய்யன்புடன் வந்து வசித்து, விதிப்படி வழி பட்டு வரும் அன்பர்கள் நகுலேஸ்வரரின் மகத்தான அநுக்கிரகத்துக்குப் பாத்திரராவார்கள் என்பது புராண சம்மதம். தீராத நோயாளர்கள், இங்கு வந்து வசித்து நியமந் தவறாது ஒழுகிவரின் அந்நோய்கள் நீங்கிவிடல் பிரத்தியட்சம். இக் கீரிமலையும் அதன் சுற்றுப் புறங்களும் சிறந்த வளநலங்களை யுடையன. இங்கு கடற்கரை யோரத்திலே, தெள்ளிய தீம்புனல் பெருக்கெடுத்து சமுத்திரத்துடன் சங்கமம் ஆகின்றது. இங்குள்ள விசேடங்களிலே, இது மிகச் சிறந்தது. இதன் இயற்கை வனப்பு இன்றியமையாதது. இந்நன்னீர்ப் பெருக்குச் சுகாதாரத்துக்கு மிகுந்த பிரயோசனமுள்ளது கரைமெடுகிலும் அலைமோதி ஒதுக்கப்பட்ட வெண்மணலின் வனப்பு கடற்கரை யுலாப்போவாரைக் களிப்புறச் செய்வது. இங்கு வீசும் இளம் மாருதம் உள்ளத்துக்கு இதந்தை விளைப்பது. ஆரோக்கியத்தைக் கொடுப்பது. நளன் ஸ்ரீராமச் சந்திரன், அருச்சுனன், முசுகுந்தன் முதலியோர் இங்கு வந்து பூசித்ததாகச் சரித்திர முண்டு. எனவே இதன் பழமை வரையறுத்துக் கூறுந் தரத்ததன்று.

## வீணுகான புரம்.

இராவணன் சாமவேதகானம் பாடும் வீணையிலே சுசங்கீதன் என்னும் கந்தர்வன் ஒருவன் மிகுந்த ஆர்வங் கொண்டான். ஆதலின், அதைக் கவர்ந்து, கொள்வதற்கு ஏற்ற தருணத்தை அவன் எதிர்பார்த்திருந்தான். இராவணன் ஸ்ரீராமபிரானுற் சம்மாரஞ் செய்யப்படவே

அந்த வீணையை அக்கந்தர்வன் கவர்ந்து வந்து இக்கிரி மலையில் வைத்து கானம் பாடினான். அது சிவபிரானுக்கு மிகுந்த பிரீதியை உண்டாக்கியது. உடனே சிவபிரான், பிரசன்னமாகி சுசங்கீதனுக்கு, அருள் பாலித்து வீணை கொண்டு, அற்புதமான கானஞ் செய்யப்பட்டமையின் அந்த இடத்துக்கு வீணாகானபுரம் எனப் பெயர் வழங்கு மாறும், அங்கு ஓர் நகரமுண்டாக்குமாறும் பணித்து அந்தர்த்தானமாயினார். சுசங்கீதன் காட்டை வெட்டி நாடாக்கி, ஆங்குள்ள ஆலயத்தைப் புதுக்கி, தன்னுல கடைந்துஇன்புடன் வாழ்ந்தான் என்று தக்ஷிணகைலாச புராணங் கூறுகின்றது. இதனால்இக்கிரிமலைக்கும், அதைச் சார்ந்த யாழ்ப்பாண நாட்டிற்கும், வீணாகானபுரம் என் னும் ஓர் பெயர் பூர்வ காலத்திலே ஏற்பட்டமை விளங்கு கின்றது.

## தக்ஷிணகைலாச புராணம்.

வானவர்கடொழுங்கோணை யண்ணலையுந்தேவியையு மகிழ்ந்து முன்னாட், டேனனைய மொழிக்கங்குற்கரிபுதல் வனன்பினொடு செய்ய சாம, கானமதாற்றுதிக்கும்படி கரத்திற்றரித்திடு மக்கலத்தைக் கண்டே, யான சுசங்கீத னெனுங் கந்தர்வனதைக் கவர்தற்காசையுற்றான்.

உற்றதொரு சமயம்பார்த்துற்றிருந்த வனிராமனுயர் வெங்கோலா, லிற்றபோழ்தினிற் கவர்ந்து மானுடவடி வாகி யீணையில் கிரிப், பொற்றையெய்திக் கங்காசங்கமப் புணரி நதியாடிப் பொருவிலாத, பற்றொடரன்றனை யேத்தி வீணாகானந்தனைப் பண்ணினானால்.

பண்ணுதலுஞ் சிவபிரான் மகிழ்ந்து வெளிப்பட்டு சுசங்கீதனைப் பார்த்,துண்ணெகிழ்ந்து நீ வீணாகரனாய் நின்றிசைத்தமையாலோங்கு மிங்ஙன், மண்ணவர்கள்

புகழ் வீணுபணமெனும் பெயராக மற்றிப்பாங்க, ரெண்ணில்பதலமுளவிக் காட்டை வெட்டி நகராக்கென்றியம் பிப்போனுன்.

போனவரன் மொழிப்படியச் சுசங்கீ தன் காட்டை வெட்டிப் புரமதாக்கித், தானழிந்த வாலயங்கடணையு மெழில் பெறப்புதுக்கிச் சனங்கடம்மை, யான குடியா யிருத்தி நகுலேசரடி பரவியருள் பெற்றேகி, மானிலமெலாம் புகழுத்தன தலசந்தனிலடைந்து வாழ்ந்தானன்றே.

நகுலமுனிவர் வரலாறு.

மேருமலையிலே, ஓர் காலத்திலே, இருடி ஒருவர் இருந்து தவம் புரிந்து வந்தார். இவரின் வதனம் கீரியின் முகத்தைப் போன்றது ஆதலின் நகுலமுனிவர் என்னும் பெயர் இவருக்கு ஆயிற்று. இவர் அந்தமுகரோகத்தைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு, தலங்கள் தோறும் சென்று தொழுது வந்தார் யாதொரு பயனுங் கிடைக்கவில்லை. ஈற்றிலே இக் கீரிமலை என்னுந் தலத்துக்கு வந்து, ஆங்குள்ள அருவி நீர்ச்சங்கம சாகர தீர்த்தத்துட்படிந்து, இறைவனை முறைப்படி தொழுது வந்தார். இவரின் வதனரோகம் நீங்கியது. பிரம்மோபாசனைக்கும் யோகாப்பியாசத்துக்கும், சிறந்த தானமாக இந்த இடம் இருந்தமையின், இங்குள்ள மலைக்குகையுள் வைகி, அரிய தவத்தைச் செய்து, பெறற்கரும் பேறடைந்தார். இவர் இருந்து தவஞ் செய்து அருள்பெற்ற இடமாதலின், இது கீரிமலை யென்றும் நகுலமலை யென்றும் அழைக்கப்படுகின்றது.

ஈழமண்டல சதகம்

மேருமால்வரையில் வருநகுலமுகமுனிமுனுன்
மேவியெங்கெங்கு மூழ்கி
மீதூரிலங்கைவட கடலின்மேல் பாற்றீர

மினிர்வெற்பொர் நதிகண்டுளஞ்
சேருமாதரவிஞெடு திருவருள் செலுத்திடச்
சென்று நியமத்தொடாடித்
தீர்வை முகமொருவியே சிவதரிசனஞ் செய்து
திகழ்நிட்டைதனின் வைகினுன்
சாருமோர் காரணம்பற்றியச்சயிலமுந்
தாழ்கங்கையுந் தாணுவுஞ்
சத்தியுந் தம்பெயர் முதற்கண குலப்பெயர்
தழங்க நிலவுலகு சாற்றும்
தாருகாவனர்கரும சமையந்தடுத்தாட்கொள்
சாந்த நாயகி சமேத
சந்த்ரமௌலீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுரதல வாசனே.

## விஜயராசன்.

மகத தேசத்தில் இருந்து, இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களின் முன்னர், விஜயராசன் என்பவன் ஈழநாட்டுக்கு வந்து இந்தியாவிலிருந்து சனங்களைக் குடியேற்றி அரசு புரிந்தான். இவன் இக்கீரிமலையை வந்து தெரிசித்து இங்கு கிலமடைந்து, கிடந்த ஆலயங்களைப் புதுக்குவித்தான் என்று இலங்கைச் சரித்திரம் இயம்புகின்றது.

## மாருதப்பிரவாகவல்லி.

சோழமண்டலத்திலே, உக்கிர சோழன் என்னும் அரசனுக்கு மாருதப்பிரவாகவல்லி யென்னும் ஓர் புதல்வி அவதரித்தாள். அவதரித்தும் என்னே? இவள் தீயவினையும் உருண்டு திரண்டு வடிவெடுத்தாற்போல இவள் முகம் துரகமுகத்தை ஒத்து இருந்தது. பிள்ளைப் பேறடைந்த பெற்றோரின் மனோநிலையைக் குறித்து இங்குபேசுவானேன்?

இந்த இளங்குமாரி நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகத் தனது பராயத்தை அடைந்தாள். அடையவே முன்னை வினை பின்னுங்குறுக்கிட்டுகுன்மவலியுங் இவளிடங்குடிகொண்டது. இவள் தனது பழைய பிறவியில் கனகசுந்தரி என்னும் பெயருடன்வடநாட்டுஅரசன் ஒருவனின் புத்திரியாகப் பிறந்து, தலயாத்திரைசெய்து வரும்போது அயக்கிரீவ முனிவரைக் கண்டு பரிகசித்தனள் என்றும், ஆதலின் அவர் இட்ட சாபமே இங்ஙனம் வந்து சூழ்ந்தது என்றுங் கூறுவர். "குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியோடு, நின்றன்னார் மாய்வர் நிலத்து" என்றபடி பெரியார் சாபம் பிழைபோகுமா? இம் மாருதப்பிரவாகவல்லிக்கு உள்ள கொடிய நோய்களைக் கண்ட பிதா மாதாக்களும் பந்துக்களும் மற்றையோரும் அடைந்த மனக்கலக்கம் இம்மாத்திரம் என்று இயம்புதல் கூடுமா? இங்ஙனம் மனக்கலக்கம் அடைந்தும என்னை? ஊழ்வினையை வென்றார் யாவரும் இல்லை யன்றோ? இம்மங்கை நல்லாள் தனக்கு உள்ள கொடிய நோய்களை நினைந்து, நினைந்து, சிந்தைநைந்து, தந்தையின் அநுமதிபெற்று, தலயாத்திரை சென்றாள். காசிமுதற் கன்னியாகுமரிவரையிலுள்ள தலங்கள்தோறும் சென்று ஆங்காங்குள்ள தீர்த்தங்களிலாடியும், மூர்த்திகளைத் தெரிசித்தும் யாதும் குணமடைவது பிரதிகூலமாக முடிந்தது. இன்னவினை இன்னகாலத்தில் இன்ன தலத்தில்நிவாரணமாகும் என்று ஓர் நியதி யுண்டன்றோ? சாந்தலிங்க சுவாமிகள் என்னும் ஓர் மகான் மூலமாக இந்நகுல தீர்த்த மகிமையை அறிந்திருந்தாளாதலின், இவள் உடனே இலங்கைக்கு வந்து திருக்கேதீச்சுரம், திரிகோணமலை, கதிர்காமம் முதலிய தெய்வீகத்தலங்களைத் தெரிசனை செய்து கொண்டு இந்நகுலேஸ்வரத்தை அடைந்தாள். இங்கு அன்புடன் வதிந்து சமுத்திரசங்கம தீர்த்தத்துள் நியமந் தவறாது

படிந்து நகுலேஸ்வரப் பெருமானை இடையறாப் பக்தியுடனும் முறைதவறாச் சிரத்தையுடனும் தொழுது வந்தாள். வரவே, குதிரை முகரோகமும், குன்மவலியும், பருதியைக்கண்ட பனியேபோன்று நிவாரணமடைய பொன்னொளிர் மேனியும் மதியொளிர் முகமும் பொருந்தி விளங்கினள் *என்பது பாரம்பரியமும் பனுவற் கூற்றுமாம்.

## திரிகோணாசல புராணம்.

அகில்கமழ் கரியகூந்தல் அணியிழை அங்கணிங்கி, மகிமைசான் முனிக்குத் தீர்வை வதனத்தின் வடிவை மாற்று, நகுலமால் வரையின் பாலாய் நண்ணிய தீர்த்தந் தன்னிற், பகர்முறையாடலோடு பரிமுக நீங்கிற்றன்றே.

பரிமுக நீங்கிவாசப் பங்கய முகங்கள் கூம்ப, விரிகதிர் பரப்பித்தோன்றும் வெண்மதி முகமும் பொற்பார், உருவமும்பெற்றேயாங்கணுறைநகுலேசரோடும், பொருங்கயற் கண்ணினாளைப் போதுகொண்டரிச்சித்தேத்தி.

## கைலாசமாலை.

பொன்னித்துறைவன் புலிக்கொடியன் பூவின்மன்னர்
மன்னனெனுஞ் சோழன் மகளொருத்தி—கன்னி மின்னேர்
தேடுக்கடலருவித் தீர்த்தசுத்த நீரகத்து
ளாடிப்பிணிதணிப்பதாணினைந்து—சேடியர்தஞ்
சேவைகளுங் காவலுஞ் சேனையுமாய் வந்திறங்கிப்
பாவையுறு தீர்த்தம்படிந்ததற்பின்.

பரிமுகரோகம் நீங்கி புதிதமதி முகம் பெற்ற இத்தையலாள், தனக்குற்ற கொடிய ரோகங்கள் சௌக்கியமடைந்ததும், பட்டற்ற பகிழ்ச்சி கொண்டு, முன்னையிலும் பன்மடங்கு அன்புடன், முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளாகிய நகுலேச்சுரப் பெருமானை நேற்றி யிறைஞ்சி வந்தாள். இவள் வசித்த இடம் மாவிட்டபுரத்துக்குச் சமீபத்திலே இருக்கின்றது. அது இந்நாளிலும் குமாரத்தி பள்ளம் என்று வழங்குகின்றது.

## காங்கேசன்துறை.

இப்பெண்ணரசி இங்கு ஓர் சுப்பிரமண்ய ஆலயம் அமைப்பதற்கு மிகுந்த விருப்பங் கொண்டவளாக இருந்தாள். ஆகவே, இவள் தனது ரோகங்கள் சௌக்கிய மடைந்தமையையும், ஆலயம் அமைப்பதற்குள்ள தனது ஆர்வத்தையும், தனது தந்தையாகிய சோழனுக்கு அறிவித்தாள். சோழராசன் பேருவகை கொண்டு கோவில் கட்டுவதற்கு வேண்டிய பொருட்களையும் விக்கிரகங்களையும் அனுப்பி வைத்தான். சுப்பிரமண்யப் பெருமானாகிய காங்கேய மூர்த்தியின் விக்கிரகம் வந்து இறங்கிய இடம் அன்று தொடக்கம் காங்கேயன்துறைஎன்று அழைக்கப் படுகின்றது.

## மாவிட்டபுரம்.

இங்ஙனம் சோழகுமாரி அலங்காரமான தூபிகள் மதில்களுடன் ஆகமவிதிப்படி கந்தவேளுக்கு ஓர் ஆலயம் சமைத்து ஆனி உத்தரத்தன்று பிரதிஷ்டை செய்வித்து,

"ஓராறு திருமுகமு மணிக்குழையு மருளொக்கு மொளிர்கைவேலு, மீராறு புயகிரியு மிலங்கிய செம்பொன் முடியுமிணர்க்கடப்பந், தாராறுதடமார்புந் தயங்கமட மின்னார்கள் சார்பின்மேவக், காராறு சோலைசெறி நகுலமலைப் பதியுறையுங் கந்தாபோற்றி"

எனப்போற்றித்துதித்துவந்தாள். இன்றும்மாவிட்டபுரத்திலே ஆனிஉத்தரத்திலேகொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகின்றது. அக்காலத்தில் மாருதப்பிரவாக வல்லியால் கோவிற்பூசகராகநியமிக்கப்பெற்றவர்சிதம்பரத்தினின்றும் வருவித்த பெரியமனத்துள்ளார் என்பவராம். இவர் இங்கு ஏற்கனவே குடியேறியிருந்த காசிகோத்திரப் பிராமணர்

களுள் தில்லைநாயகி அம்மாள் என்னும்பெண்ணை வதுவை புரிந்து வாழ்ந்து வந்தார். மாருதப்பிரவாகவல்லிக்குக் குதிரைமுக ரோகம் நீங்கிய காரணத்தால் இந்த இடம் மாவிட்டபுரம் என்று அழைக்கப்பட்டுவருகின்றது. இது அசுவமோசனபுரம் என்றுஞ் சொல்லப்படும்.

## திரிகோணசல புராணம்.

ஏற்றமம்மாதினுக்குப் புரவியின் முகம் தீர்ந்திட்ட, வாற்றினலப்பதிக்கு மாவிட்டபுர மென்றோர் பேர், சாற்றினாரவளுமாங்குச் சரவணேற்பவனுக்கன்பான், மாற்றிலா மணியாற் பொன்னால் வான்றிருப்பணிகள் செய்தாள்.

## வையாபாடல்.

கூடிய குதிரை முகமது மாறக் குலமுள தீர்த்தங்கள்யாவும்
தேடியே யிலங்கை நகரினிற் சென்று திறமுள கீரிமாமலையி
லாடினள்தீர்த்தம் அம்முகமன்றதன்னதாய் மாவிட்டபுரமென்
றேடரும்பதியும்நிகரிலவென்றே இறைஞ்சினளிறைவனைநினைந்தே

இம் மாருதப்பிரவாகவல்லி உக்கிரசிங்கன் என்னும் மன்னனை வேட்டு, பாலசிங்கன் என்னும் புதல்வனை யீன்றாள். இவன் பாண்டிய குமாரியாகிய சமதூதியை மணந்தான். கண்டி யென்னும் செங்கடக நகரிலிருந்து, ஜெயதுங்கவரராச சிங்கன் என்னும் பட்டப் பெயருடன் ஆதியில் அரசியற்றிய வேந்தர்கோன் இவனே. அந்தகக் கவிவீரராகவன் என்னும் யாழ்ப்பாடிக்கு மணற்றி யென்னும் யாழ்ப்பாணத்தைப் பரிசளித்து, இன்றளவும் இந்நாட்டுக்கு யாழ்ப்பாணம் என்னும் பெயர் நின்று நிலவக் காரணபூதனாயிருந்த புரவலர் பெருமான் இவனே. கீரிமலையில் ஓர் அழகிய சிவாலயத்தை அமைப்பித்த மன்னவர் பெருந்தகை இவனே என்றும் சொல்லப்படுகின்றது.

## புவனேகவாகு.

மதுரையிலிருந்து, ஆயிரம் வருடங்களின் முன்னர் பிராமணோத்தமர் ஒருவர் யாழ்ப்பாணம்வந்து யாழ்ப்பாண அரசனிடம் புவனேகவாகு என்னும்பட்டப்பெயருடன் முதன்மந்திரிஉத்தியோகத்திலிருந்தார். நல்லூர்க்கந்தசுவாமி கோவில் ஸ்தாபகர் இவரேயாம். இவர் ஓர் முறை இக்கீரிமலைக்கு வந்து தெரிசனை முதலியன செய்து கொண்டு மாவிட்டபுரத்துக்குச்சென்றார். அப்போது மாவிட்டபுரக் காங்கேயமூர்த்தி ஆலயப் பூசகராயிருந்த சின்னமனத்துள்ளார் என்பார் இப்புவனேகவாகு என்னும் மந்திரிக்கு ஓர் அரிய விருந்தளித்தார். அதனை வியந்து புவனேகவாகு கூறிய வெண்பா இங்கு குறிப்பிடத்தக்கது.

### வெண்பா

சின்னமனத்துள்ளார் செய்விருந்தின் சாற்றுருசி
அன்னதினம் விண்ணோரறிந்திருந்தால்—முன்னே
வெற்பதனைக் காவிமேலே கடைந்த வவ்வமுதம்
அற்பமெனத் தள்ளுவரே காண்.

## கீரிமலை.

கீரிமலைத் தீர்த்தக் கரையிலிருந்து சிறிதுதூரத்திலே கடற்கரையிலே ஓர் குன்று உண்டு. இதுவே கீரிமலையென்றும் நகுலமலையென்றுங் கூறப்படுகின்றது. இது முற்காலத்திலே ஓர் பெரும் மலையாக இருந்து காலந்தோறும் பக்கத்தேயுள்ள கடலினாற் சிதைவுண்டு போயிருத்தல் வேண்டும் என்று எண்ண இடமுண்டு. இக்குன்றிலே கடற்கரையோரமாக ஓர் பெருங்குகையுண்டு. நகுலமுனிவர் வாசம் செய்த குகை இதுவே என்று கூறுகின்றார்கள். இக்குன்றின்மேல் நவீனமாக ஓர் கிருஷ்ணன் கோவில் கட்டிப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது.

இங்கு பூர்வகாலத்தில், திருத்தம்பளேஸ்வரர் கோவில் என்னும் நகுலேஸ்வரர் கோவிலேயன்றி, வேறும் சில ஆலயங்கள் இருந்ததாகத்தெரியவருகின்றது. இப்பூர்வீக ஆலயங்கள் கடல் கொள்ளப்பட்டும், போர்த்துக்கேயர் முதலிய அன்னிய நாட்டாரால் இடிக்கப்பட்டும் அழிந்து போயின. சிலகாலத்தின் முன்னர் புதிதாக ஓர் பெருஞ் சிவாலயங்கட்டிப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. இதுவே இப்போதுள்ள நகுலேஸ்வரர் ஆலயம். கடற் கரையின் சமீபத்திலே காசிவிசுவநாதர் கோவில் என்னும் ஓர் சிறு கோட்டம் புதிதாக அமைக்கப்பட்டு இருக்கின்றது. கீரிமலைத் தீர்த்தக் கரையோரமாகத் தருமகருமங்களிலேயே பெரும்பான்மையும் ஈடுபட்டிருந்து காலஞ் சென்ற ஸ்ரீமான், வல்லிபுரமவர்கள் அமைப்பித்த தீர்த்தக் கேணி மிக்க உபயோகமுள்ளது. இங்கிருந்து ஜலப்பிரவாகம் ஊற்றெடுத்து எந்தநேரமும் சமுத்திரத்துடன் சங்கமமானபடியே யிருக்கின்றது. இக் கீரிமலை என்னும் இடத்திலே, அநேகர் மடாலயங்கள் அமைப்பித்திருக்கின்றார்கள் இங்குவந்து வசிப்பவர்களுக்கு இம்மடங்கள் இன்றியமையாதனவாயிருக்கின்றன. சதாகாலமும் சனங்கள் இங்குவந்து வசிக்கின்றனர். நாடோறும் தீர்த்த ஸ்நானத்துக்கும் சுவாமி தெரிசனத்துக்கும் இங்கு வரத்துப்போக்குச் செய்வோர் பலர். அபரக்கிரியை முதலிய கருமங்களின் பொருட்டு சனங்கள் இங்குவந்து கூடாத நாளே கிடையாது. இது ஓர் சுகாதார ஸ்தானமானதின் அன்னிய சமயிகளும் இங்கு வந்து விடுதி விடுகின்றனர். சுக்கிரவாரம், மகம், மாமாங்கம், சிவராத்திரி, கிரகண காலம், அர்த்தோதயம், தையமாவாசை, ஆடியமாவாசை முதலிய புண்ணிய காலங்களிலே பெருந்திரளான சனங்கள் இங்கு வந்து கூடுகின்றனர்.

## தீர்த்தமாலை.

கங்கையின் மூழ்கினும் பேய்ச்சுரைகாகங் கதிப்பிலிதிற், சங்கையிலென்ற தர்வுரைசாயத் தலத்தருய்ய, மங்கையுந்தோயக் குரமுகமோட்டிய வார்கிரிவே, லங்கையன்தீர்த்த நகுலத்திஞுகுமறிமின்களே.

---

மாருதப்பிரவாகவல்லி தான் சௌக்கியமடைந்ததும் மாவிட்டபுரக் காங்கேயமூர்த்தி கோவிலையமைத்து, ஆக வேண்டிய கருமங்களை முடித்துக்கொண்டு தனது சுயநாடு சென்று அங்கே உக்கிரசேனராசன் என்னும் அரசனை மணந்து பாலசிங்கன் என்னும் குமாரனை யீன்றாள் என்றும் அவனை கண்டியில் வந்து அரசு புரிந்தான் என்றும் திரிகோணாசலபுராணங் கூறுகின்றது இலங்கை யாழ்ப்பாணச் சரித்திரங்கள் இம்மாது, கதிரைமலையிலிருந்து அரசாண்ட உக்கிரசிங்கராசன் என்பவனால் மணம் செய்யப்பெற்று பாலசிங்கனையீன்றாள் என்று கூறுகின்றன. யாழ்ப்பாணத்தைக் கவிவீரராகவன் என்னும் யாழ்ப்பாடிக்கு பரிசளித்தவன் கண்டியிலிருந்த பாலசிங்கன் என்பது சிலர் கொள்கை. அநுராசபுரத்திலிருந்து அரசாண்ட ஏலேலசிங்கனே வீரராகவனுக்கு பரிசளித்தான் என்பது சிலர் கூற்று.. சிலர் வலகம்பாகு என்னும் சிங்கள அரசனை வெற்றிகொண்டு அநுராசபுரத்திலிருந்து அரசாண்ட தமிழ் பிரதானிஒருவராற் கொடுக்கப்பட்ட தென்பர்.